உ

விநாயகன் துணை.

பிரமவித்தை

என்னும்

பிரமபடிப்பு.

இஃது,

விருத்தாசல க்ஷேத்திரத்திலிருக்கும்

ப.ரூர்

சேஷகிரி அய்யரவர்களால்

இயற்றப்பட்டு

மாத்தூர், இராமச்சந்திர அய்யரவர்களால்

இதற்கு முகவுரை செய்ததை

பிறைசை, சி. துரைசாமி நாடார்

அவர்கள் பொருளுதவியினாலும்

பிறையாறு,

இரத்தின விலாசம் அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.

1911. விலை அணா 0-1-0.

OFFICE OF THE ... MADRAS 19 SEP 1911

உ

விநாயகன் துணை.

பிரமவித்தை

என்னும்

பிற்மபடிப்பு.

இஃது,

விருத்தாசல க்ஷேத்திரத்திலிருக்கும்

பரூர்

சேஷகிரி அய்யரவர்களால்

இயற்றப்பட்டு

மாத்தூர், இராமச்சந்திர அய்யரவர்களால்

இதற்கு முகவுரை செய்ததை

பிறைசை, சி. துரைசாமி நாடார் அவர்கள்

பொருளுதவியினலும்

பிறையாறு,

இரத்தின விலாசம் அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.

1911.

MADRAS

188
181.48

பிரமவித்தை முகவுரை.

இந்த கிரந்தமானது சத்தியோ பிர்மஞானத்தைக் கொடுக்கத்தக்கதாயிருக்கிறது. ஒருவன் இரண்டுநாழிகையில் பிர்மஞானத்தை அடையவேணுமென்று அவசரப்படுவானேயானால், அவன் இந்தப்புஸ்தகத்தைத் தான் பார்க்கவேணுமென்று 3-வது முதல் 46-வது பிரிவுகளால் தெளிவாயேற்படுகிறது. சரீரம் ஸ்திரமில்லாததினால் யாவரும் அவசரமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். அதனால் யாவரும், இதைத்தான் பார்க்கவேணுமென்று தாத்பரியம், மேலும் 25-26-வது பிரிவுகளால் ஜாதி-மதாபிமானமில்லாதவரால், இந்தப்புஸ்தகம் செய்யப்பட்டதென்று யேற்படுகிறது. ஆனதினால் இந்தப்புஸ்தகம் சரியாயிருக்குமென்று நம்பத்தக்கதாயிருக்கிறது. அநேக கிரந்தங்கள் பார்த்தவர்களை தேகத்திலிருந்து ஜீவனைப்பிரித்து ஜீவேஸ்வர ஐக்கியத்தைச்செய்யுமென்றால் அப்படிச்செய்ய சக்தியற்றவர்களாய் சாஸ்திரவாதங்களைமட்டில் எடுத்துச்செல்லுகிறார்களேயல்லாமல் அனுபவத்தைக்காட்ட அவர்களால் சாத்தியப்படவில்லை. இந்த கிரந்தத்தைப் பார்த்தவர்களுக்கு அப்படிச்செய்ய சாத்தியப்படும். 7-வது முதல் 30-வது பிரிவுவரையில் தத்துவசோதனைசெய்து, ஜீவனைப்பிரிக்கும்வழியும் 31-வதுமுதல் 41-வது பிரிவுவரையிலே ஜீவேஸ்வர ஐக்கியத்தையும்பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது.

பிரமவித்தை.

சிஷ்யகுரு ஸம்வாதம்.

ஞானோபதேச ப்ரகரணம்.

1. சிஷ்யன்:—அஞ்ஞானமாவது என்ன?

ஆசாரியன்:—தன்னைத்தான் அறியாமல் இதரகாரியங்களில் பிரவரத்திக்கிறதற்கு அஞ்ஞானமென்று பெயர்வைத்திருக்கிறார்களே யொழிய! அஞ்ஞானமென்று, ஒருவஸ்து இல்லை, அஞ்ஞானமென்றால், அறியாமை.

2. சி.—மாயையாவது என்ன?

ஆ.—மாயையென்றால், பகவானுடைய காரியங்கள், மாயையென்று ஒரு வஸ்து இல்லை.

3. ஆ.—நீ இவைகளை ஏன் விசாரிக்கிறாய்?

சி.—சுவாமி, மோக்ஷத்தை அடையவேண்டியதற்காக விசாரிக்கிறேன்.

ஆ.—மோக்ஷமாவது, விடுதலை. விடுதலையென்றால், அதற்கு முந்தி எதினாலேயாவது பிடிப்பிருந்து இருக்கவேண்டும். பிடிப்பென்றால், பந்தமென்று அர்த்தம். மோக்ஷத்தைக் கோருகிற நீ இருபத்துநாலு தத்துவங்களில், எந்தத்தத்துவம் உன்னைப் பிடித்துக்கொண்டிருக்கிறதோ அதையறிந்து, விடுதலைபண்ணிக்கொள்ள வேண்டியதேயல்லாமல், மாயை, அஞ்ஞானம், ஜெகத்திருஷ்டி முதலானவைகளை விசாரிக்கவேண்டிய தவசியமில்லை.

4. சி.—எனக்கு ஏன் ஞானமில்லை?

ஆ.—கருப்பு, சிகப்பு, உருசி, அருசி, பக்குவாபக்குவங்கள், ஸ்வர, அட்சரங்கள், கணக்குகள், லாபாலாபங்கள், விவகாரங்களிலுள்ள ஞாயமனியாயங்கள் முதலானவைகளை ஞானமில்லாமல் தானறிகிறாயோ?

ஆ.—ஞானமில்லை என்று அஞ்ஞானத்தினலறிந்தாயா? ஞானத்தினலறிந்தாயா?

சி.—அய்யா! இதனல் எனக்கு ஞானமிருப்பதாக ஏற்படுகிறது. ஞானமென்றால், என்னமோ என்றிருந்தேன்.

5. சி.—எனக்கு என் பிரம்மஞானமில்லை?

ஆ.—பிரமஞானமென்று ஒன்று, இந்திரஞானமென்று ஒன்று, சந்திரஞானமென்று ஒன்று இருக்கிறதோ?

6. சி.—எந்தவழியைப்பிடித்தால், மோக்ஷத்தையடைந்து, நித்தியானந்தத்தைப் பெறலாமோ, அந்தவழியைக் காட்டவேண்டும்.

ஆ.—என்னத்தினல், உன்னுடையகால் நொண்டியாயிருக்கிறதோ, அதை, ஆலோசனைசெய்துபார். இதுதான் ஞானமார்க்கம் பிராப்தகாலம் வரவேண்டுமென்று சில சோம்பேரிகள் சொல்லுவார்கள், "சிரத்தாவான்லபதே" ஞாமென்று கிருஷ்ணபகவான் சொல்லியிருப்பதால், அக்கரையுள்ளவன் ஞானத்தையடைவான்.

ஞானேபதேச ப்ரகரணம்

முற்றிற்று.

தத்துவசோதனை ப்ரகரணம்.

7. என்னுடைய கால் என் நொண்டியாயிருக்கிறதோ அதையாலோசனை செய்யென்று சொன்னரல்லவோ, அதை இப்போது ஆலோசிக்கிறேன்.

8. என்னுடைய கால் என் நொண்டியாயிருக்கிறது? இந்த நொண்டி சரீரத்தை நானே எடுத்துக்கொண்டதல்ல, நானே எடுத்துக்கொள்ளுகிறதாகயிருந்தால் என்னிஷ்டப்படி நல்ல சரீரம் எடுத்துக்கொள்ளுவேன்.

9. என் தாயாருடைய கருப்பத்திலேயே அல்லவோ, இந்த நொண்டி சரீரம் உண்டாயிருக்கிறது. என் தாயாருடைய கருப்பத்திலே பிரவேசித்து என்னுடைய காலே நொண்டி பண்ண மனிதர்களாலே ஆகமாட்டாது.

10. நான் செய்த பாவத்திற்கு எவரோ கெற்பத்திலேயே, சிக்ஷை கொடுத்திருப்பதாக ஏற்படுகிறது. அவர் தான் ஈஸ்வரனாக இருக்கவேண்டுமென்று எண்ணுகிறேன்.

11. கெற்பத்திலேயே சிக்ஷை கொடுத்ததினாலே அதற்கு முந்திய ஜென்மத்திலே நான் செய்த பாவத்திற்கு கொடுத்த சிக்ஷையாயிருக்கிறது.

12. இன்னும் இந்த ஜென்மத்தில் பாவம் செய்தால் வருகிற ஜென்மத்தில் எப்படி சிக்ஷை செய்வாரோ!

13. இதனால் நான், போன ஜென்மத்தில் இருந்தேன் இந்த ஜென்மத்தில் இருக்கிறேன், வருகிற ஜென்மத்திலிருப்பேன்.

14. இவ்விதமாய் அந்தந்த ஜென்மத்தில் ஆலோசனை செய்தால் மும்மூன்று ஜென்மங்கள் தெரியவரும்.

15. மூன்று ஜென்மங்களிலும் நானிருப்பதாய்த் தெரிய வருகிறபடியினாலே நான் நித்தியன்.

16. இதற்கு முந்திய ஜென்மத்தில் நானில்லாவிட்டால் எனக்குப் பாவமுமில்லை, என்னுடைய கால் நொண்டியாகமாட்டாது. பாவம் பண்ணாதவனை சிக்ஷிக்க நியாயமில்லை. பாவமில்லாமல் சிக்ஷித்திருந்தால் அப்படி சிக்ஷித்தவன் ஈஸ்வரனாகமாட்டான்.

17. நான் போன ஜென்மத்தில் இறந்துபோயிருந்தால் இந்த ஜென்மத்தில் எப்படி பிறப்பேன் இறந்துபோகிறதென்றால் இருக்

ற சரீரத்தைவிட்டு வேறொரு சரீரம் எடுக்கிறதென்று தோன்று றது.

18. எந்தத் தத்துவம் பிடித்துக்கொண்டிருக்கிறதோ, அதை மோக்ஷார்த்தியானவர் விசாரிக்க வேணுமென்று சொன்னாரல்லவோ அதை இப்போது விசாரிக்கிறேன்.

19. நான் வருகிற ஜென்மத்தில் பசுவாகப் பிறந்தால் அப்போது கைகள் இருக்கமாட்டா, ஆனத்தினால் கைகள் இந்த சரீரத்திலேயே நின்றுவிடுகிறது. எனக்கு கைகள் இருந்தால் நான் எடுக்கும்படியான் பசு சரீரத்திலும் இருக்கவேண்டுமல்லவோ! அப்படிக்கில்லாமல் இந்த சரீரத்திலேயே நின்றுவிடுகிறதானத்தினாலே கர்மேந்திரியங்கள் என்னைப் பிடித்துக்கொண்டிருக்கவில்லை. கர்மேந்திரியங்கள் நானல்ல பசு சரீரத்திற்கு கர்மேந்திரியங்கள் ஐந்துக்கு குறைவுபடுகிறது. ஆனதினால் கர்மேந்திரியங்கள் சரீர சம்பந்தமேயல்லது சரீரியாகிய எனக்குச் சம்மந்தமானவைகளல்ல.

20. வண்டாகப்பிறந்தால் சுரோத்திரேந்திரியமில்லை. ஆனதினாலே இதுவும் முன்போலவே சரீர சம்பந்தமேயல்லாது சரீரியாகிய எனக்குச் சம்மந்தமானதல்ல, ஆனத்தினால் ஞானேந்திரியங்களும் என்னைப் பிடித்துக்கொண்டிருக்கவில்லை.

21. விருக்ஷமாகப் பிறந்தால் இருபத்திநாலு தத்துவங்களுமில்லையானதினால் இருபத்துநாலு தத்துவங்களும் முன்போலவே சரீரத்துக்குச் சம்மந்தப்பட்டவைகளேயல்லாமல் சரீரியாகிய எனக்குச் சம்மந்தப்பட்டவைகளல்ல, இருபத்துநாலு தத்துவங்களும் என்னைப் பிடித்துக்கொண்டிருக்கவில்லை எல்லா தத்துவங்களும் சரீரத்தையே பிடித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் மரமானது எதையறியுமென்றால் ஸ்பரிசத்தை மாத்திரம் அறிகிறது. மரமாகப்பிறந்தால் எல்லா தத்துவங்களும் நசித்து அறிவுமாத்திரம் சேடித்து நித்தியமாயிருக்கிறது பின்னும் சர்ப்பத்திற்கு சட்சு சுரோத்திரேந்திரியங்கள் ஒன்றாகயிருக்கின்றன. வௌவாலுக்குப் பிராணபானங்கள் ஒன்றாகயிருக்கின்றன. இன்

னும் அநேக பிரகாரங்களாக சரீரங்களுக்குத் தக்கபடி ஏற்றக் குறைச்சலாயும் ஸ்தான பேதங்களாயுமிருக்கின்றன.

22. புண்ணியபாவங்களுக்குத் தக்கபடி சரீரங்கள் வந்துக் கொண்டும் போய்க்கொண்டும் இருக்கின்றன. ஆகையால் எனக்கு ஸ்திரமான சரீரமேயில்லை. ஆனத்தினால் சரீரம் நானல்ல சரீரமும் என்னைப் பிடித்துக்கொண்டிருக்கவில்லை.

23. ஆனால் நான் எப்படிப்பட்டவன் என்றால் அந்த சரீரங் களுக்கு உண்டாகிற சுகதுக்கங்களை அறிகிறேன். ஆனதினாலே அறிவாகமாத்திரம் இருக்கின்றேன்.

24. பசுவாகப்பிறந்தால் அப்போது புல்லையல்லவோ புசிக்க வேண்டும், ஆகையால் ஆகாரங்கள் சரீரத்துக்குச் சம்மந்தப் பட்டவைகளேயல்லாமல் சரீரியாகிய எனக்குச் சம்மந்தப்பட்ட வைகளல்ல.

25. இன்னமும் இந்த தேசத்திலுள்ள செவிடு, ஊமை, வலி, வியாதி, காயங்கள் முதலானவைகள் இந்த தேகத்திலேயே நின்று மற்றொரு தேகத்திற்கு வராமலிருப்பதாலே இவைகளும் சரீர சம்பந்தமேயல்லது சரீரியாகிய எனக்கு சம்மந்தப்பட்டவைக ளல்ல. இவைகளும் சரீரத்தையே பிடித்துக்கொண்டிருக்கிறதே யல்லாமல் சரீரியாகிய என்னைப் பிடித்துக்கொண்டிருக்கவில்லை.

26. இந்த தாய் தந்தைகள் இன்னொரு சரீரம் எடுக்கும் போது எவ்வித முறையுள்ளவர்களாவார்களோ, அல்லது சத் துருக்களோ, அல்லது மித்திரர்களோ ஆனதினால் இவர்களும் சரீர சம்மந்திகள்.

27. இப்பொழுது இந்த சொத்துகள் என்னுடையதென்றும் இன்னமும் அண்டை வீட்டுக்காரனுடைய சொத்துக்களை அப கரிக்கவெண்ணுகிறேன். அந்த அண்டைவீட்டில் நான் பிறந்தால் அப்போது இந்த வீட்டுச் சொத்துக்களையல்லவோ அபகரிக்க எண்ணுவேன் ஆனதினால் எனக்குச் சொந்தமான சொத்துக்கள் எவை? ஆகையால் சொத்துக்களும் சரீரசம்மந்தங்களாகயிருக் கின்றன.

28. இப்பொழுது பிராமணனாக இருக்கின்ற நான் இனி மிலேச்சனாகப் பிறந்தால் இந்த வர்ணாஸ்ரமாசார தருமங்கள் அப்போது இருக்கமாட்டா. ஆனதினாலே இந்த வர்ணாஸ்ரமாசார தருமங்களும் சரீரத்துக்குச் சம்பந்தப்பட்டவைகளாகவே இருக்கின்றன.

29. இப்போது இந்த சைவமதத்திலிருந்துகொண்டு வைஷ்ணவர்களைத் தூஷிக்கிறேன். வைஷ்ணவனாகப் பிறந்தால் வைஷ்ணவச்சின்னங்களைத் தரித்துக்கொண்டு சைவர்களையல்லவோ தூஷிப்பேன் ஆனதினாலே மதங்களும் சரீரசம்மந்தங்கள்.

30. இந்த சேஷகிரிஅய்யர் என்கிற பெயர்வந்த பதினோராவது நாள் புண்ணியவசன தினத்தில் தாய் தந்தையர்களாலே வைத்தபெயரல்லவோ அதற்கு முந்தி எனக்கு இருந்த பெயரென்ன? என்னமோ அவர்களுக்குத் தோன்றியபடியே வைக்கிறார்கள்.

31. இப்போது எனக்கு நூறுவயதென்று வேதம் ஆயுசு விதித்திருக்கிறது, நான் குதிரையாகப் பிறப்பனேயானால் அப்போது எனக்கு பிரம்மாயுசு முப்பத்திரண்டல்லவோ ஆகையால் வேதம் சரீரத்திற்கு ஆயுசுவிதித்ததேயல்லாமல் சரீரியாகிய எனக்கு ஆயுசு விதிக்கவில்லை.

32. ஆனதினாலே மேற்சொன்னவைகளெல்லாம் சரீர சம்மந்தமாய் சரீரத்தையே பிடித்துக்கொண்டிருக்கிறதேயல்லாமல் சரீரியாகிய என்னைப் பிடித்துக்கொண்டிருக்கவில்லை. ஆகையால் சதா மோக்ஷத்திலேயே இருக்கின்றேன்.

33. இதுவரையில் சோதனை செய்துபார்த்ததில் ஒன்றும் என்னை பந்திக்காமல் நித்தியமாய் அறிவாகமாத்திரம் இருக்கிறேனென்று ஏற்படுகிறது. அறிவென்று சொன்னால் அறிவை உடைத்தானவன் ஒருவன் இருக்கவேண்டும். அதைப்பற்றி இன்னும் ஆலோசிக்கிறேன்.

நாஹாந்தேகி நேந்திரிமாண்ணியந்தரங்கம், நாஹரங்காரஹா, பிராணவகோன, புத்திதார, பத்தியக்ஷேத்திரவித்தி

யாதி, தூரரசாக்ஷிசித்தியம், பிரேத்தியகாத்மா.

இந்த அர்த்தத்தைப்பற்றிதான் மேலே சொல்லப்பட்டிருக்கிறது.

சிவோஹம் என்பதைப்பற்றி அடுத்த பிரகரணத்தில் சொல்லப்படுகிறது.

தத்துவசோதனை ப்ரகரணம்.

முற்றிற்று.

ஜீவன்முத்திப் ப்ரகரணம்.

34. அப்படி நித்தியமாய் அறிவாகமாத்திரம் இருக்கின்ற எனக்கு சரீரம் இப்பொழுது வந்ததென்றால் பாஞ்சபூதிக சிருஷ்டிக்கு பின்பல்லவோ வந்தது அதற்குமுன் எனக்கு சரீரமே இல்லாமல் இருந்ததென்று வெளிப்படையாக ஏற்படுகிறது நான் நித்தியனாய் அறிவுமாத்திரமாக இருக்கிறேன் என்று முன்னமே சொல்லி இருக்கின்றேன்.

35. அறிவு என்றால் அறிவைக்கொண்டு அறிகிறவன் ஒருவன் இருக்கவேண்டும். அறிவைக்கொண்டு அறிகிற காரியங்களும் இருக்கவேண்டும் முதலில் அறிவைக்கொண்டு அறிகிறவனை நிச்சயிப்போம்.

36. இந்த அறிவு நித்தியமென்று முன்னமே சொல்லியிருப்பதினாலே மகதாதி சிருஷ்டிக்கு முன்னும் இந்த அறிவு இருந்திருக்கவேணும், மகதாதி சிருஷ்டிக்கு முன்னும் இந்த அறிவைக்கொண்டு அறிகிறவனும் இருந்திருக்கவேண்டும்.

37. அப்படி மகதாதி சிருஷ்டிக்கு முன் இருந்தவன் எவன் பிரமதேவனா, விஷ்ணுவா, சிவனா அது எவரோ ஒழுங்குப்படி விசாரிப்பதில் ஏற்படுகிறவன் தான் அவன் இந்த ஜெகத்தை உண்டுபண்ணினவன் அப்போது இருந்திருக்கவேண்டும். ஆனால் இந்த ஜெகத்தை யார் சிருஷ்டித்தது.

38. இந்த ஜெகத்துக்கு முந்தியிருந்த ஜெகத் முதலான சர்வத்தையும் சம்ஹாரம் செய்து எவன் மீந்தானோ அவன் தான் இந்த ஜெகத் சிருஷ்டிக்கு காரணனாக இருக்கவேண்டும்.

39 அப்படிக்கு யார் சர்வசம்ஹாரம் செய்தது எல்லா புராணங்களிலும் சர்வஸம்ஹார அதிகாரம் சிவனுக்கே இருப்பதாக வெளிப்படையாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனதினாலே அப்படிப்பட்ட சிவன் தான் இந்த ஜெகத்துக்கு முந்தி இருந்த ஜெகத் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்கு காரணனாக இருக்க வேணும். ஸர்வஸம்ஹாரமாவது அப்படிப்பட்ட சிவனைத்தவிர வேறே எவராவது ஒருவர் இருந்தாலும் வேறெந்த வஸ்து இருந்தாலும் ஸர்வஸம்ஹாரம் ஆகமாட்டாது.

40. ஆனதினால் இந்த ஜெகத் சிருஷ்டிக்கு முந்தி யார் இருந்ததாக ஏற்படுகின்றதென்றால் இந்த ஜெகத்துக்கு முந்தியிருந்த ஜெகத்து முதலானவைகளை ஸம்ஹரித்து மீந்த சிவனல்லவோ இருந்தான் அப்போது ஆனதினால் நித்தியமாயிருக்கும்படியான அறிவ்யிருந்தது இந்த அறிவைக்கொண்டு அறிகிறவன் அந்த சிவன் தானென்று வெளிப்படையாக ஏற்படுகிறது.

41. அந்த சிவன் இப்பொழுது எங்கேயிருப்பானென்றால் அந்த அறிவு இருக்கிறவிடத்தில் அவன் இருக்கவேண்டும். அறிவு அவனைவிட்டுப் பிரியாதானதினால், அவனிருக்கிறவிடத்தில் அந்த அறிவு இருக்கவேண்டும். அந்த அறிவு எங்கேயிருக்கிறது? அந்த அறிவானது இந்த என்னுடைய சரீரத்திலேயே இருக்கிறதானதினாலே இந்த அறிவை உடைத்தான அந்த சிவனும் இந்த என்னுடைய சரீரத்திலேயே இருக்கவேண்டும்.

42. ஆனால் அறிவு வேறு அந்த அறிவை உடைத்தானவன் வேறென்று சொல்ல இடமில்லை. எப்படியென்றால் ஜுவாலை வேறு ஜுவாலையை உடைத்தான அக்கினி வேறென்று சொல்ல எப்படி இடமில்லையோ அப்படிப்போலவே அறிவை உடைத்தான அந்தசிவன் வேறென்று சொல்ல இடமில்லை. எப்படி ஜுவாலையே அக்கினியாகவும் அக்கினியே ஜுவாலையாகவும் இருக்கிறதோ அப்

படியே அந்த சிவனே அறிவாகவும், இந்த அறிவே சிவனுகவும் இருக்கிருன்.

43. ஆனதினுலே அறிவே சிவன், அந்த சிவனே அறிவு, அவனே பரப்பிரம்மம், அந்தப் பிரம்மமே நான்.

44. இதனுலே தான் பிரஞ்ஞானம், பரமா, என்றுந் தத்துவம் சி தத்துவம் சி என்று வேதமானது சொல்லியிருப்பதுமல்லாமல், "ததேகோ வசிஷ்ட சிவக்கேவலோகமென்று" சங்கராசாரியார் சொல்லியிருக்கிருர்.

சிவோஹம்.

இந்த அர்த்தத்தைப்பற்றிதான் மேலே சொல்லப்பட்டிருக்கிறது.

ஜீவன்முத்திப் பிரகரணம்.

முற்றிற்று.

நைராசிப் பிரகரணம்.

45. இப்படி அறிவுமாத்திரமாக இருக்கின்ற என்னை எவனுவது அடிக்கலாமா, கத்தியினுலே வெட்டலாமா, அக்கினியிலே கொளுத்தலாமா, தண்ணீரிலே நனைக்கலாமா, காற்றினுலே சோஷிக்கலாமா பஞ்சபூதங்களுக்கு சம்மந்தமான எவைகளாலே தான் நான் ஸ்பரிசிக்கப்படுவேன். நான் ஒருவர் கையிலும் கண்ணிலும் தட்டுப்படுகிறவனல்லவே, அறிவு மாத்திரமாக இருக்கின்ற எனக்கு எந்த சொத்துக்களாலேயும் ஈஷணுத்திரயங்களாலேயும், ராகத்துவேஷாதிகளினுலேயும், அன்னபானங்களினுலேயும், மானுவமானங்களினுலேயும், லாபாலாபங்களினுலேயும் என்ன பிரயோசனமிருக்கின்றது.

46. சரீர சம்மந்தமானவைகள் எத்தனை வந்தன எத்தனை போகின்றன, எனக்குச் சொந்தமானது ஒன்றும் வரவுமில்லை போகவுமில்லை. இப்போது காமக்குரோதாதிகள் எவ்விடத்தில்

எப்படிப்போய்விட்டதோ இவ்வளவு நானறிந்த பின்பல்லவோ காமக்குரோதாதிகள் என்னை விட்டன, இதற்கு முந்தி போஎன்ருல் போகுமா.

47. எவரோ எந்த பறையனோ எந்த கழுதையோ ஒருவன் வீட்டில் பெண்ணுகப்பிறந்து மனைவியென்று முறை சம்பாதித்து கொண்டுவந்து சேர்ந்தால் இப்பிரகாரமே புத்திரனும் வந்துசேர்ந்தான். இதைப்போலவே ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையைக் கற்பித்துக்கொண்டு சந்தைக்கூட்டம்போல வந்துகூடியிருக்கிருர்கள். இந்த ஜென்மத்தில் இவர்களைப் போஷிக்கிறதும், வருகிறஜென்மத்தில் இப்போதிருக்கிற இந்த முறையுள்ளவர்களைப் போஷிக்கிறதும், இப்போதவ்விடத்தில் வீடுகட்டுகிறதும், நிலம் வாங்குகிறதும் இன்னும் எந்தெந்தவிடத்தில் பிறப்பேனே அவ்வவ்விடத்திலுமிதே வேலைகள் தானே செய்கிறது? சிச்சீ அசங்கியம்.

வைராசியப் பிரகரணம்
முற்றிற்று.

சந்தேகந்தெளிதற் பிரகரணம்.

48. இப்போது நான் அடையவேண்டியதை அடைந்திருக்கின்றேனே, செய்யவேண்டியதை செய்திருக்கின்றேனே இன்னம் ஏதாவது பாக்கியிருக்கிறதா என்பதை விசாரிப்போம்.

49. "ஞானமேவமோக்ஷஹா" என்பதற்கு அறிகிறதுதான் மோக்ஷம் என்றுவேதம் சொல்லியிருப்பதினலேயும் அறிந்தபின்பு ஒன்றும் செய்யவேண்டியதில்லை என்று வெளிப்படையாய் ஆர்த்தங்கொடுப்பதினலேயும், இனி நான் செய்யவேண்டியது ஒன்றுமில்லை.

50. இதற்குத் திருஷ்டாந்தம் பரிக்ஷித்து மகாராஜன் சுகராலே ஞானேபதேசமடைந்த பின்பு மோக்ஷத்துக்குவேண்டியது தபசு முதலான காரியங்கள் ஏதாவது இன்னம் இருப்ப

தாகச் செய்தானே? ஸ்ரீ கிருஷ்ணபகவானாலே ஞானோபதேசம் பெற்றுக்கொண்ட அர்ச்சுனன் தான் ஏதாவது இன்னம் இருப்பதாகச் செய்தானே நான்மாத்திரம் என்செய்வேன்?

51. ஆனால் ஞானமடைந்தபின்பு பரீக்ஷித்துக்கு சாவகாசமாயிருந்தபடியினாலே பகவானுடைய குணாதிசயங்களைக் கேட்டார். ஆனதினாலே நானும் அப்படியே செய்கின்றேன். அப்படிசெய்வதினாலே இப்போது தெளிவடைந்த மனம் மறுபடியும் கலங்காமலிருக்குமென்று தோன்றுகிறது. ஆனால் அப்படித் தெளிந்தவர்கள் மறுபடியும் கலங்கிப்போனார்களோவென்றால் குடும்பியாயிரு ஒரு மஸ்தியத்தைப் பார்த்தமாத்திரத்திலே "சௌபரிஷி" என்பவர் சம்சாரியாய் விடவில்லையா, தனியாயிருந்த மச்சகந்தியைப்பார்த்த பராசரிஷி அவள்பேரில் மோகிக்கவில்லையா, மானுடைய சேர்க்கையாலே ரிஷியாயிருந்த பரதன் கெட்டுப்போகவில்லையா ஆனதினால் மனதை நம்பக்கூடாது அடிக்கடி வேதாந்த காலட்சேபபுராண சிரவணங்களை நடத்திக்கொண்டே வரவேண்டும் பின்னும் வசிஷ்டாதி மஹாரிஷிகள் விதிவாக்கியத்துக்குட்பட்டு நித்திய கர்மானுஷ்டானங்களை நடத்திக்கொண்டு வந்தார்கள், நானும் அப்படியே நடத்திக்கொண்டு வருவேன்.

52. நான் என்னை எப்போது பிரம்மமென்று அறிந்தேனோ என்னைப்போலுள்ள ஸ்தாவர சங்காத்மாக்களாக இருக்கிற எல்லா ஜீவர்களும் பிரம்மமே இதனாலேதான் "ஸர்வம், கல்விதம் பிரம்மா" யென்று வேதம் சொல்லியிருக்கிறது. நான் இதுவரையில் இத்தியாதி வாக்கியங்களை உபசார வாக்கியங்களென்றிருந்தேன். இப்போது என்னை பிரம்மமென்று அறிந்த பின்பு அந்த வாக்கியங்கள் யதார்த்தமான அர்த்தத்தை சொல்லி இருப்பதாக ஏற்படுகிறது.

53. நித்தியம், பூர்ணம், ஏகம், பரமார்த்தம், பரப்பிர்ம சத்தியம், ஜீவன், சூட்சம், போதம், சாக்ஷி கூடஸ்தன், தத்து

வம், சதாநந்தம், ஜோதி, ஆத்மா, முத்தம், சிவம் முதலானவை கள் பிரம்மத்தினுடைய பெயர்கள்.

54. எல்லா ஜீவனும் பிரமமாக இருந்தால் ஒருவரோடொருவர் துவேஷிப்பானேன், சிநேகிப்பானேன் என்று கேட்டால் ஒரே விஷ்ணுவான பரசுராமன் தசரதராமனோடு துவேஷித்தானென்று ராமாயணம் சொல்லவில்லையா? பிரகலாதனும், நாரதரும் விஷ்ணுவென்று பாகவதம் ஏகவிம்சதி, அவதார சங்கற்பத்தில் சொல்லவில்லையா? அவர்கள் ஏன் விஷ்ணுபக்தி செய்தார்கள்? விஷ்ணுதானே தன்னிடத்தில் பக்தி துவேஷங்களை எப்படி பண்ணிக்கொண்டாரோ அப்படியே என்று அறியத்தக்கது. பின்னும் கிருஷ்ணபகவான் தானே கன்றுக்குட்டிகளாயிருந்துகொண்டு தன்னையே தான் மேய்த்துக்கொள்ளவில்லையா? அப்படியே தான் இப்பொழுதும்.

55. ஜீவன் பிரமமாக இருந்தால் சிருஷ்டிக்கிற அதிகார[illegible] இருக்கிறதா? என்று யோசிக்கிற பக்ஷத்தில் விஸ்வாமித்திரன் சிருஷ்டிக்கவில்லையா? அவர் ஜீவனல்லவோ, விஸ்வாமித்திரன் எந்த தேவதையையாவது ஆராதித்து, சிருஷ்டி அதிகாரத்தைப் பெற்றானென்று எந்த புராணங்களிலும் சொல்லவில்லை.

56. பிரம்மதேவன் முதல் எறும்புவரையிலுள்ள ஜீவர்[illegible] நித்தியர்களென்றும், ஜீவர்கள் வேறே, பரமாத்மா வேறே என்[illegible] சிலர் சொல்லுகிறார்கள். மேலும் பிரம்மதேவன் எல்லா ஜீவர்களுக்கும் முந்தியிருந்த ஜீவனென்று சொல்லுகிறார்கள். அப்படிக்கானால் பிரம்மதேவனும் நித்தியமாயிற்று. அப்படிக்கு நித்தியனாக இருக்கின்ற சதுர்முகப் பிரம்மாவானவன் பகவானுடைய நாபிக்கமலத்தில் உண்டாவதற்கு முன்னிட்டு இருந்திருக்கவேண்டும். அப்படி உண்டாவதற்கு முந்தி இன்ன இடத்தில் இருந்தானென்று எந்த புராணங்களிலு மகதாதி சிருஷ்டி பிரகரணங்களிலும் சொல்லவில்லை. ஆனதினாலே ஆத்மாவை பத்திரனுமாசியென்ற சுருதி வாக்கியப்படி பரப்பிரம்மமே திரிமூர்த்திகள் முதல் எறும்பு வரையில் தானாகவேயிருக்கிறது. ஜீவர்கள்

வேறே பரமாத்மா வேறே என்று சொல்ல இடமில்லே. பரமாத்மாவே எல்லாமாகவிருக்கிறது என்றுசெவ்வையாக ஏற்படுகிறது.

57. பிரம்மத்துக்கு எவ்விடத்திலுமுள்ள சங்கதிகள் தெரியுமே. இந்த ஜீவன் பிரம்மமாக இருக்கிற பக்ஷத்தில் இதற்கு அவ்விதமாய்த் தெரியவேண்டுமே என்கிறூர்கள். அந்த பிரமம் எங்கும் நிறைந்ததானபடியினுலே அவ்வவ்விடத்திலே இருந்து அறிந்துகொள்ளுகிறது. அந்தப்படியே இந்த ஜீவனும் இந்தசரீரத்தில் நிறைந்திருப்பதினுலே இதில் நடக்கிற காரியங்களை எல்லாமறிந்துக்கொள்ளுகிறது.

58. பிரம்மக்ஞானி யானவன் திரிகால வேதியராயிருக்க வேண்டுமென்று சிலர் சொல்லுகிறூர்கள். திரிகாலவேதியராயிருந்தால் தான் பிரமக்ஞானம், ஸ்திரபட்டதாயெண்ணவேண் டுமென்று எந்த வேதாந்தத்திலும் சொல்லப்படவில்லே. இந்த முக்காலத்தையும் சோதிடசாஸ்திரங்களும், கர்னஎக்ஷணி முதலான பிசாசுகளும் சொல்லுகின்றன. அவைகளை பிரம்மக்ஞானி யென்று சொல்லலாமோ?

59. சி.—சுவாமி இன்னெரு ஆக்ஷேபனை இருக்கின்றது.

ஆ.—நீ இவ்விதமாய் ஆக்ஷேபனை பண்ணிக்கொண் டிருந்தால் பிரம்ம நிஷடையில் ததேகத்தியானமா யிருப்பது எப்போ? நீயும் என்னைப்போல புராணங்களைப்பார்த்தால் அந்த ஆக்ஷேபனைகளுக்கு சமாதானங்கள் ஏற்படும் அப்படி சமாதானங் கள் ஏற்படாவிட்டாலும், ஆத்மஞானத்துக்கு ஒருகெடுதியுமில்லே.

சி.—ததேகத்தியானமாவதென்ன?

ஆ.—நீ இதுவரையில் மனிதனுகிய நமக்கு எல்லாபொருள்களும் வேணுமென்று எப்படி அபிமானித்தாயோ, அப்படியே பிரம்மமாகிய நமக்கு இவைகளினுலே என்ன பிரயோசனமென்று அபிமானிக்காமல் சொஸ்தசித்தனுக இருப்பதே தேகத்தியானம் அதுவே பிரம்ம நிஷ்டை.

சந்தேகநிவர்த்தி பிரகரணம்

முற்றிற்று.

சிஷ்யசோதனைப் பிரகரணம்.

60. ஆ.—ஓ! சிஷியனே, நீ கண்களை உடைத்தாயிருப்ப தற்கு ஆத்மதரிசனம் தான் பிரயோசனம்.

சி.—சுவாமி என்னை சோதிக்கவேண்டாம்? ஆத்மா பாஞ்சபூதிக சம்மந்தமல்ல பாஞ்சபூதிக சம்மந்தமாயிருக்கிற இந்த கண்களுக்குத் தென்படாது. ஆத்மாயிருக்கிறதென்று புத்தியினுலறிக்கூடுமே தவிற வேறொன்றினுலுமறியக்கூடாது.

61. ஆ.—சிஷியனே இன்னும் தபோயோகங்கள் முதலான எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறதே அவைகளையெல்லாம் செய்துமுடித்தாயா.

சி.—சுவாமி மோக்ஷத்தைபடையவேணுமென்பது என்னுடைய கோறிக்கை மோக்ஷத்தைபடையவேணுமென்ருல் அ ற்குமுந்தி பந்தமொன்றிருக்கவேண்டுமே எதாவது என்னை பிடித்துக்கொண்டிருந்தாலல்லவா அதில் நின்று விடுதலையாகவேண்டியது எது என்னைப் பிடித்துகொண்டிருக்கிறது? என்று தத்துவ சோதனை செய்துபார்த்ததில் ஒன்றும் என்னை பிடித்துகொண் டிருக்கவில்லை. ஆனதினுல் சதா மோக்ஷத்திலேயேயிருக்கி னென்று தெளிவாய் எற்படுகிறது ஆகைபால் நான் ஒன் செய்யவேண்டியதில்லை.

62. ஆ.—சிஷ்யனே! இதுவரையில் நீ எவ்வளவுபிரயாசைப் பட்டு உன்னையே பிரம்மமாக தெரிந்துகொண்டிருக்கிருய் நானே இதைச்சொன்ஞல் நீ ஒப்புக்கொள்ளக்கூடாதா அல்லது வேத தத்துவமஸீ என்று சொல்லியிருக்கிறதே அதையாவது நீ ஒப்பு கொள்ளக்கூடாதா.

சி.—சுவாமி தாங்கள் அவ்விதமாய்ச் சொன்னபோதி வேதம் அவ்விதமாய் சொல்லியிருந்தபோதிலும் எல்லாம்பரோ மாகயிருக்கிறதேயல்லாமல் அபரோக்ஷமாக யில்லை. "ஞான மேவமோக்ஷஹா" அறிகிறதுதான் மோக்ஷமென்று தத்து

10
117360

சொல்லுகிறதேயல்லாமல் பரோக்ஷமாய்க் கேள்விப்படுகிறது மோக்ஷமென்று சொல்லவில்லையே. ஆனதினாலே யாரும் தத்துவ சோதனைசெய்து பிரமத்தை அறிந்தால்தான் மோக்ஷம் இல்லா விட்டால் இல்லை.

63. 1, "தத்துவமஸீ" (அது நீயானாய்) என்பதினாலே உப தேசவாக்கியமாயிற்று.

2, "அகம் பிரமாஸ்மி" (நான் பிரமமாகிறேன்) என் பதினாலே மேற்கண்டவுபதேசவாக்கியப்படி தத் துவசோதனை செய்துபார்த்ததில் சரியாயிருக்கிற தென்று ஒப்புக்கொண்ட வாக்கியமாயிற்று.

3, "அயமாத்மா பிரம்மம்" (இந்த ஆத்மாபிரமம்) என் பதினாலே மேற்கண்டவுபதேச வாக்கியபடி தத்துவ சோதனை செய்துபார்த்ததில் மேலே சொல்லியபடி நிச்சயித்தவாக்கியமாயிருக்கிறதென்று ஏற்படுகிறது.

4, "பிரக்ஞானம் பிரம்மம்" (ஆராய்ந்து அறிந்த அறிவு பிரமம்.) அறிவுதான் பிரம்மத்துக்கு ரூபமேயொ ழிய வேறேவடிவம் கிடையாதென்று அர்த்தமாகிறது.

64. ஆ.—இன்னம் என்ன யோசிக்கிறாய்?

சி.—சுவாமி அந்தவஸ்துவை தியானம்பண்ணிக்கொண் டிருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன்.

ஆ.—நீ சொன்ன இவைகளெல்லாம் சரியே உன் மனதை சோதித்தேனேயொழிய வேறில்லை. "அகம் பிரமாஸ்மி" என் கிற மந்திரத்தை உனக்கு உபதேசிக்கிறேன். அதை ஜெபத்தியானம் பண்ணிக்கொண்டிரு. பின்னும் கற்கண்டை கட்டியாய் வாயிற் போட்டுக்கொண்டு கற்கண்டினுடைய சுவையை நாக்கு அறிகி றதா, நாக்கின்வழியாய் அறிகிறது ஒன்று இருக்கிறதா என்று கொஞ்சநேரம் யோசித்துப்பார்த்தால் அப்பொழுது அந்தசுவை யையறியும்படியான அறிவுஒன்று இந்த சரீரத்திலிருப்பதாக ஏற் படும். அந்த அறிவானது எப்போதும் புத்திக்குத் தென்பட்டுக்

கொண்டேயிருக்கும். அதுதான் பிரமதரிசனம். அடியிலிருந்து தெளிந்துவந்தவன் செய்யவேண்டிய காரியம் இது.

65. சி.—இவ்வளவு சுலபமானதினாலேதான் கட்வாங்கன் பார்த்த கோபஸ்திரீகள் முதலானவர்கள் இரண்டு நாழிகையில் மோக்ஷத்தையடைந்தார்கள். இவ்வளவு சுலபமாக ஞானோபதேசம்செய்த தங்களை ஜெகத்குருசங்கராசாரியரென்று எண்ணி சாஷ்டாங்க தெண்டனிடுகிறேன்.

66. ஆ.—ஓ சிஷியசிகாமணி! நமக்கு குருத்க்ஷணைகொடுங்காணும்.

சி.—என்ன கொடுக்கும்படி சொன்னாலும் அதைக் கொடுக்கிறேன்.

ஆ.—நீ பாகவதாதிப் புராணங்களைப் பார்த்து அவைகளுடையபொருள்களும் நான் உனக்கு உபதேசம்செய்த பொருள்களும் ஒத்துமையாயிருக்கும் படியான இடங்களில் நீ சந்தோஷப்படுவாயே, அதுதான் நமக்கு குருதக்ஷணை.

67. சி—அனுபவத்திலும், தத்துவமஸீமுதலாகியவாக்கியார்த்தங்களினாலும், ஜீவேஸ்வர பேதமில்லையென்று தெரியவருகிறது. சிலவிடங்களில் வாசித்துகொண்டுவரும்போது ஜீவேஸ்வர பேதமாக ஊகம் ஏற்படுகிறது. கைவல்லியக்காரர் அத்வைதியாயிருந்தும், அச்சுவத்தம் என்கிற விருக்ஷத்தில் இரண்டு பக்ஷிகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று ஜீவன் ஒன்று ஈஸ்வரனென்று பேதமாகக் குறிப்பிட்டு இருக்கிறார். அச்சந்தேகந் தெளியச் சொல்லவேண்டும். இதுதான் 56-வதுபிரிவில் நான் கேட்கவந்தது.

ஆ.—நீ அத்வைதியாயிருந்தும், தத்துவசோதனை செய்கிறகாலத்தில் ஜீவேஸ்வர பேதமாகச் சொல்லியிருக்கிறாய். அந்தப்படி விவகாரகாலத்தில் பேதமாகச் சொல்லாவிட்டால், சொல்லும் சங்கதி ஏற்படாது. எப்படியென்றால் :—

1. சரீரத்தில் முள்தைத்திருக்கிறது என்று சொல்லும்போது அம்முள் தேகத்திலெந்தபாகத்தில் தைத்திருக்கிறதென்று கண்டுபிடிப்பது பிரயாசம். என்னுடைய வலதுகால் பெருவிரல் நுனியில் முள்தைத்திருக்கிறதென்றால் எவ்வளவு சிக்கிரத்தில்

கண்டுபிடிக்கக்கூடும். ஒரேசரீரமாகவிருந்தும் ஏற்படும்பொருட்டு வலதுகால் பெருவிரல் நுனியென்று பேதப்படுத்தி சொல்ல வேண்டியதாய் நேரிட்டது. இப்படியே சங்கதிக்குத் தக்கபடி இருக்குமென்று அறிந்துகொள்ளவேண்டியது.

2. கைவல்யகாரர் சொன்னபடிக்கு பகவத் கீதையிலும், பாகவதம் கிருஷ்ணவதார சந்தர்ப்பத்திலும், சொல்லப்படுகிறது. அந்த அச்சுவத்த விருட்சமென்பது எப்படி இருக்கிறதென்று விசாரித்தாயா? மேலே வேர் கீழே கிளையாயிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. விருட்சத்திற்கு வேர் மேலேயும், கிளை கீழேயும் இருக்குமா? இப்படிப்பட்ட விருட்சமேயில்லை. அப்படிப்பட்ட விருட்சம் இருந்தாலல்லவா அதில் இரண்டு பட்சிகள் அல்லது ஒன்றுயிருக்கிறதாவென்றுவிசாரிக்கவேண்டும். பிறக்காதவனுடைய சாவைப்பற்றி விசாரப்பட்டவனுண்டோ! விவாகமே இல்லாதிருக்கும்பொழுது தீர்ப்பு உண்டாயிருக்குமோ! அறுபதுநாழியும் தியாஜ்ஜியமென்று எழுதி இருக்கிறதென்றால் அப்படிப்பட்ட பஞ்சாங்கம் ஒன்று இருக்குமென்று எண்ணுகிறவனும் உண்டோ! அந்த அச்சுவத்த விருட்சத்துக்கு மாயா விருட்சமென்றும், சமுசார விருட்சமென்றும் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட விருட்சத்தை இருக்கிறதாய் ஒப்புக்கொண்ட மாயாவாதிகள் ஜீவேஸ்வர பேதமாகச் சொல்லுவார்கள். இந்த சங்கதியைப்பற்றி பாகவதத்தில் எப்படிச் சொல்லுகிறதென்றால், ஓ பகவானே! எல்லாம் நீயாயிருக்க, மாயா விருட்சத்தில் பேதமாகச் சொல்லப்படுகிறாய், எப்படிச்சொன்னபோதிலும் அப்படிப்பட்ட ஸ்தோத்திரங்களெல்லாம், உன்னையே வந்தடைகின்றனவென்று ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் தோத்திரஞ் செய்கிறார்கள்.

உபன்னியாசம்.

1. பிரமவித்தையாவது, பிரமத்தை அறிவிக்கும்படியான [வித்]தை பிரமவித்தை எனப்படும்.

வித்தை = ஞானம்

வித்தையென்றால் படிப்பு, படித்துவரவேணுமேயல்லாமல் கர்மத்தினால் வரமாட்டாது. வர்ணாஸ்ரமாசார தருமங்கள், நித்திய நைமித்தியாதி கருமங்கள், தீர்த்தயாத்திரைகள், பக்தி வைராக்கியங்கள் முதலானவைகளால் பிரமக்ஞானம் உண்டாக வேணுமென்று சிலர் சொல்லுகிறார்கள். பரிக்ஷித்தானவன் மேலே சொல்லப்பட்ட கருமங்கள்யாவும் தப்பாமல் செய்து அந்தப்படியே பிரஜைகளையும் செய்யும்படிக்குச் செய்வித்தும், தருமதேவதையை நாலு பாதங்களோடு கலியுகத்தில் நடக்கும்படியாக நடப்பிவித்தும், பிரமக்ஞானம் வராமல் சுகராலேயல்லவோ பிரமக்ஞானத்தையடைந்தான். பிரமக்ஞானத்திற்கு உபதேசங் காரணமாக இருக்கிறதேயொழிய கருமம் காரணமாகவில்லை. இன்னம் மோட்சத்தை அடைந்த அநேகர் பிரமவித்தையை உபதேசித்துக்கொண்டு மோட்சத்தை அடைந்ததாக பாகவதாதி புராணங்களால் ஏற்படுகிறது. "நகர்மணா" என்கிற சுருதியிலே கருமத்தினால் பிரமக்ஞானம் வராதென்று தெரியவருகிறது. கருமத்தினால் பிரமக்ஞானம் வருகிறதாயிருக்கிறபட்சத்தில் கருமத்தை செய்துகொண்டே இருக்கும்போது உபதேசமில்லாமல் பிரமக்ஞானம் வந்துவிடவேணும். ஆனதினால் இந்த பிரம வித்தையை வாசித்தே ஆகவேணுமென்று சித்தாந்தப்படுத்தி, இந்த கிரந்தத்துக்கு பிரமவித்தையென்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை அத்தியாத்ம வித்தையென்று சொல்லலாம்.

"இவ்வளவு சங்க்ஷேபமாக வேதாந்தசாஸ்திரமிருக்குமா? இந்த சங்க்ஷேபமாக கிரந்தத்தினால் மோட்சங்கிடைக்குமோ?" என்கிற சங்கைக்குப் பரிகாரம் கட்வாங்க மஹாராஜா இரண்டுநாழிகையில் ஞானோபதேசம் பண்ணிக்கொண்டு மோட்சத்தை அதற்குள் அடைந்தானென்று பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்போது வேதாந்த சாஸ்திரமானது எவ்வளவு சங்க்ஷேபமாக இருக்கவேணுமோ, அதை யோசித்துக் கொள்ளவேண்டியது. ஆனால் பரிக்ஷித்தானவன் விஸ்தார கிரந்தமான பாகவதத்தை சுகரிடத்தில் என் கேட்டானென்றால் குதோகலத்தினால் கேட்டான். இன்னுமிருந்தால் இன்னும் கேழ்ப்பான். அப்படி விஸ்

தார கிரந்தத்தைக் கேட்டவன்தான் மோட்சத்தை அடைய வேண்டுமென்கிறதாக இருக்கிறபட்சத்தில் கட்வாங்கனுக்குமோட்சம் வந்ததுபொய்யாக இருக்கவேணும். பரிக்ஷித்துக்கேட்ட பாகவதத்தை யாவரும் கேட்டு மோட்சமடைந்திருக்கவேண்டும். ஆனதினல் யாவரும் மோக்ஷத்துக்குவேண்டிய இந்த கிரந்தத்தில் சொல்லியிருக்கில் அவ்வளவும் தெரிந்துகொண்டு பின்பு குதோகலத்தினல் விஸ்தார கிரந்தங்களைக் கேட்டார்கள்.

1-வது பிரிவைக் குறித்து உபன்னியாசம்:—அஞ்ஞானம் என்று ஒன்று இருப்பதாக அஞ்ஞானத்தினலறிந்தார்களோ, அல்லது ஞானத்தினலறிந்தார்களோ, அஞ்ஞானத்தில் அறிந்திருந்தால் அப்படி அறிந்த விஷயமானது தப்பாக இருக்கவேண்டும், அல்லது ஞானத்தினல் அஞ்ஞானம் இருப்பதாக அறிந்திருந்தால் அப்போது இவனுக்கு ஞானமிருக்கிறதென்றும், அதனல் அறிக்கூடுமென்றும் ஏற்படுகிறது. இதனலேயும் 4-வது பிரிவினலேயும், அஞ்ஞானமில்லையென்றும், ஞானந்தானிருப்பதாயும் தெளிவாக ஏற்படுகிறது.

2-வது மாயைவந்து மூடிக்கொண்டதென்று சொல்லுகிருர்கள். அப்படிச் சொல்லுவதினலே, மாயை இவ்விதமாய் வந்து ...ன்னத்தினலே மூடினதென்று அவர்களுக்குத் தெரிந்திருக்க... எந்த ரூபமாய் வந்து எதினலே மூடினதென்ருல் அவர்...குச் சொல்ல சக்தியில்லை. மாயையென்பது ஒரு தேவதையுமல்ல, மனிதர்களை வஞ்சிக்க சிருஷ்டியானதுமல்ல, மாயாதத்துவமென்று ஒன்று இருக்கிறது. அது வந்து மூடுகிறதென்று சொல்லுவார்களாக்கும். அதனுட்பிறந்த மகதத்துவம், அகங்கார தத்துவங்கள் இவர்களை என்ன செய்கின்றன? மாயாதத்துவத்துக்கு மட்டில் நம்மை மூடும்படியான வல்லமையை யார் தந்தார்? அப்படி பகவானே மாயையை உண்டுபண்ணி மனிதர்களை வஞ்சிக்கும்படியே இருப்பானேயானல் அவன் பகவானுவானு? அப்படிப்பட்ட வஞ்சகன் நமக்கு நல்ல பதவியைக் கொடுப்பானே! ...டுக்கமாட்டான்.

தமிழ் பேசுகிறவன் தெலுங்குபேசாமல் பண்ணிவிட்டது அந்த மாயைதானே!

அப்பியாசம் செய்வதினால் வரவில்லை.

இன்னமும் எனக்கு மிலேச்சபாஷை தெரியாது அப்படி தெரியாமல் பண்ணிவிட்டது அந்த மாயைதானே! ஞானமார்க்கத்தில் பிரவேசிப்பதற்கு சோம்பேரிதனத்தை அடைந்திருக்கிறவர்கள் மாயை வந்து மூடுகிறதென்றும், அஞ்ஞானமொன்றிருக்கிறதென்றும், நல்லகாலம் பிறக்கவேண்டுமென்றும் பலவிதமாகச் சொல்லி காலத்தை விருதாவாக கழிக்கிறார்கள். ஆனதினால் மேற்கண்ட 2-வது பிரிவில் சொன்னதேசரி.

3 வது மோக்ஷார்த்தியானவன் பக்தி செய்யவேண்டுமென்று சிலரும், ஸத்கருமம் செய்யவேண்டுமென்று சிலரும், சாதன சந்துஷ்டயத்தையடையவேண்டுமென்று சிலரும், மஹா வாக்கியார்த்தங்களை விசாரிக்கவேண்டுமென்று சிலரும், யோகாப்பியாசம் செய்யவேண்டுமென்று சிலரும், இன்னும் அனேக விதமாய்ச் சொல்லி சந்தேகம் உண்டுபண்ணுவதினாலே, அப்படிப்பட்ட சந்தேகங்கள் நிவர்த்தியாகும்பொருட்டு இன்னதுதான் செய்யவேண்டும் மற்றது செய்யவேண்டியதில்லையென்றும், அந்த மோக்ஷமென்கின்ற வார்த்தையிலேயே நியாயங் காண்பிக்கப்பட்டது.

4-வது இருக்கிறது ஒரேஞானம் ஸ்வரத்தையறிந்தால்ஸ்வரஞானம், தாளத்தையறிந்தால் காளக்ஞானம் இப்படியே ப்ர[illegible]மத்தையறிந்தால் பிரமக்ஞானம், பிரமக்ஞானமென்று தனியாய் ஒன்றுமில்லை என்று தாத்பரியம்.

5-வது எனக்கு தீர்க்க ஹிர்ஸவஸ்திரீ ஜாராவியாதிகளோடு கூடிய சரீரம் ஏன் வந்ததென்று ஆக்ஷேபித்துக்கொள்ளலாம். கெற்பத்திலிருந்து வராத அடையாளங்களைப்பற்றி ஆக்ஷேபித்துக்கொள்ளக்கூடாது. பூர்வஜென்மம் இருக்கிறதென்று சொல்லுகிற சாஸ்திரங்களை மிலேச்சசாதிகள் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. அவர்களைக்கூட சம்மதிக்கும்படியாய் கெற்பத்திலேயே உண்டான குறைவை சிக்ஷையாகக்காட்டி சிக்ஷைக்கு முந்தி குற்றம் நடந்திருக்கவேண்டும், அப்படி குற்றம் செய்தகாலம் பூர்

ஜென்மமாக இருக்கவேண்டு மென்றும் காண்பித்து அவர்க ளுடைய மதங்கள் இதனல் கண்டிக்கப்படுகின்றது.

6-வது முதல் 30-தாவது பிரிவுவரையில் விவகார காலமான தினலே, போதமாகும்பொருட்டு ஜீவேஸ்வரபேதமாகச் சொல் லப்பட்டது.

7-வது முதல் 41-வது பிரிவுவரையில் ஒரே பிரகரணம யிருக்கலாம். விவேகம் உண்டாவதற்கு இரண்டு பிரகரண களாகச் சொல்லப்பட்டது. முன்பின் ஜென்மம் இல்லையென்கிற மிலேச்சசாதிகள் மதங்கள் கண்டிக்கப்படுகின்றன.

16-17-18-இவைகளினலே கர்மேந்திரியங்களுக்கு மேற்பட் டது ஞானேந்திரியங்களென்றும் ஞானேந்திரியங்களுக்கு மேற்பட் டது அந்தக்கரணங்களென்றும், அந்தக்கரணங்களுக்கு மேற்பட் டது ஆத்மாவென்றும் இந்திரியாண்ணியா பாராண்ணியா ஹூ ஹூ என்கிற பகவத்கீதை வசனப்படிக்கு ஆத்மதரிசனம் பண்ணப் பட்டது.

3-க்கு அறிகிற காரியமாவது பிரமத்தினுடைய சிருஷ்டி திதி, சம்ஹார காரியங்களேயும் தன்னேயுமென்று எண்ணத்தக்கது.

50-க்கு நித்தியனக இருக்கின்றனென்றல், பிரமமாக இருக் கிறனென்றும், சாந்தத்தை அடைந்தானென்றல் பிரமத்தை அடைந்தானென்றும் ஸம்பாவனையென்றல், பிரமபாவனையென் றும் ஸத்தியாவாதியென்றல் பிரமவாதியென்றும் தாத்பரியம். மண் மண்ணேடுபோயிற்றென்றும், விண் விண்ணேடுபோயிற் றென்றும் ஜனங்கள் வழக்கமாகச் சொல்லுகிறர்கள். அதில் விண்ணென்பது பிரமம், பிரமம் பிரமத்தோடு கலந்ததென்று தாத்பரியம். இவ்விதமாக ஒவ்வொருபெயருக்கும் அர்த்தம்பண் ணிக்கொள்ளத்தக்கது. சிலர் பிரமக்ஞானத்தை அடையவேண் டியதற்குச் சத்கருமங்கள் செய்யவேண்டுமென்று சொல்லுகிற கள் இவர் ஸத்தாயிருந்தாலல்லவோ இவர் செய்யும்படியான கரு மம் ஸத்தாகும். விழிப்பினல் செய்தகருமம் விழிப்பல்லவா, ஸத்தென்றல் பிரமம். பிரமக்ஞானமில்லாதவன் அஸத்து, அவன்

செய்தகருமம் அசத்தாகும்.

பக்தியும் ஞானத்தில் அடங்கி இருப்பதினாலே, அ[illegible]யெடுத்து இந்த கிரந்தத்தில் சொல்லப்படவில்லை.

ஸ்தூலசூக்ஷமகாரண சரீரங்கள் அவைகளை அபிமானித்த விஸ்வதைஜஸ் பிராக்ஞர்கள் ஸத்துவம் ரஜோத்தமோ குணங்கள், பஞ்சகோசங்கள், ஜாக்கிரா சொப்பனம் சுழுப்தி இவை முதலானவைகள் அவித்தையினால் அத்தியாரோபமென்றும், கைவல்லிய முதலிய பூர்வீககிரந்தங்களில் சொல்லியிருக்கின்றன. அவித்தை என்றால் படிக்கவில்லையென்று அர்த்தமாகிறது. அத்தியாரோபமென்றால் இல்லாததை விருதாவாக ஏற்றிக்கொண்டதென்று ஏற்படுகிறது. படிக்காத மூடத்தனத்தால் ஏற்றிக்கொண்ட மேற்கண்ட ஸ்தூலசூட்சுமாதிகள் கிளிஞ்சலில் எப்படி வெள்ளி இல்லையோ அப்படிப்போலவென்று, அவைகளைச் சொல்லாமல் தள்ளிவிடப்பட்டிருக்கின்றன. மூடத்தனத்தினால் மேற்கண்ட ஸ்தூலசூக்ஷமாதிகளைமாத்திரம் சொல்லுவார்கள், இன்னமுங்கூட அநேகத்தை விருதாவாக ஏற்றிக்கொள்ளுகிறார்கள்.

பிரமவித்தை முற்றிற்று.

117380